Department Sabaragamuwa Province/ Weekly School Department of Education Sabaragamuwa Province/ Weekly School Department of Education

சப்ரகமுவ மாகாண கல்வித்திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் : செயன்முறை தொழினுட்பம்

(நவம்பர்) வாரம் : 03

தரம் : 09

ஆசிரியர்: திரு.M.K.முஸாதிக்
இ/நிவி/ கஹவத்தை முஸ்லிம் ம.வி

**பாடம்** : **4.2 சிற்றளவு வணிகமொன்றை வெற்றிகரமாக நடத்தி மீள் நோக்குதல்.**

**தொழினுட்பப் பரப்பு** : **4.0 வணிக நடவடிக்கைகள்.**

**தேர்ச்சி** : **9.0 சிற்றளவு வணிகமொன்றைத் திட்டமிட்டு நடாத்திச் செல்வார்.**

**தேர்ச்சி மட்டம்** : **9.9 சிற்றளவு வணிகமொன்றை நடாத்தி மீள் நோக்குதல் செய்து விருத்தி செய்வதற்கான பிரேரணைகளை முன்வைப்பார்.**

**<u>செயற்பாடு தொடர்பான அறிவுறுத்தல்கள்</u>**

**i.** பாடபுத்தகத்தின் பக்கங்கள் 132 - 140 வரை நன்கு வாசியுங்கள்.

**ii.** சிற்றளவு வணிகமொன்றை ஆரம்பித்து இலாபகரமாக நடாத்திச் செல்வதற்கான படிமுறைகளை உங்கள் பயிற்சிக் கொப்பியில் எழுதுங்கள்

**iii.** உமது பிரதேசத்தில் காணப்படும் வணிக நிலையங்கள் எவை என்பதைப் பட்டியற்படுத்துக. (வணிக நடவடிக்கைகள் இடம் பெறும் சந்தையொன்றில் நுகர்வோருக்கு தேவைப்படும் பொருட்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில்)

**உதாரணம் :**

| **சந்தை நிலை** | **சிற்றளவு வணிகம்** |
|---|---|
| பிரதேசத்தில் மருந்துப் பொருட்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருத்தல். | மருந்தகம் ஒன்றை ஆரம்பித்தல் |

**iv.** உம்மால் குறிப்பிடப்பட்டவற்றுள் உமக்கு/ உமது குடும்பத்தாருடன் இணைந்து மேற்கொள்ளக் கூடிய வணிக நடவடிக்கைகளைப் பட்டியற்படுத்துக.

**V.** உம்மால் குறிப்பிடப்பட்டவற்றுள் உமக்கு/ உமது குடும்பத்தாருடன் இணைந்து மேற்கொள்ளக் கூடிய/ மேற்கொள்ள முடியாத வணிக நடவடிக்கைகள் எவை என்பதைக் காரணங்களுடன் குறிப்பிடுக.

**<u>மேலே குறிப்பிட்ட செயற்பாட்டுக்காகப் பெற்றுக் கொள்ள வேண்டிய கற்றல் வளங்கள்</u>**

தரம் 9 பாடப்புத்தகம், அலகு 4.2, பக்க இலக்கம் 132 - 140

**<u>பின்வரும் இணையத்தள முகவரிகளினூடாக மேலதிக விபரங்களை அறிந்து கொள்க.</u>**

1. https : // www.cbsl.gov.lk
2. https : // www.si.unitinal.com
3. https : // www.idb.gov.lk
4. https : // si.duurstede.net

**<u>இப்பாடத்தினூடாக பெற்றுக் கொள்ளக்கூடிய கற்றற் பேறுகள்</u>**

1. சந்தை நிலை தொடர்பாக விளங்கிக் கொள்வார்
2. பிரதேசத்தின் சந்தை நிலை/ தேவை தொடர்பாக அறிந்துக் கொள்வார்.
3. சிற்றளவு வணிகமொன்றை ஆரம்பிப்பதன் தொடக்கப் படிநிலைகளைத் தெரிந்துக் கொள்வார்.